பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 22 | வியாழக்கிழமை | 09.11.2023 | கதிர் 362

### பொலிஸ் மா அதிபர் விடயத்தில்

# ஜனாதிபதி அரசமைப்பை மீறிவிட்டார் அவர் மீது குற்றப்பிரேரணை வரலாம்

### சுமந்திரன் நாடாளுமன்றில் நேற்றுக் காட்டம்

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபர் நியமனம் விவகாரத்தில் அரசமைப்பை மீறியுள்ளார். ஆகவே அவருக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வர முடியுமென இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

**நாடாளுமன்றத்தில் நேற்று புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் இடம்பெற்ற வாதப்பிரதிவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

**முன்னதாக, புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் கூற்றொன்றை முன்வைத்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, பொலிஸ் மா** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஒரு போதைப் விருந்துக் கொண்டாட்டம் இடம்பெற்றது என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலில் நவம்பர் 4ஆம் திகதி இரவு டிஜே நைட் (DJnight) எனும் பெயரில் இந்தப் போதை விருந்து கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பை சேர்ந்த நிகழ்வு ஏற்பாட்டு நிறுவனம் ஒன்று சமூக வலைத்தளங்களின் ஊடாக இந்தப் பார்ட்டிக்கு அழைப்பு விடுத்து, இளம் ஆண், பெண்களைத் திரட்டி இந்தப் போதைப் பார்ட்டியை நடத்தியுள்ளது.

ஆண்களுக்கு நுழைவு சீட்டு 1500 ரூபாய் எனவும் அவர்களுடன் வரும் பெண்களுக்கு 1000 ரூபாய் எனவும் விளம்பரம் செய்து தொலைபேசி இலக்கம் ஊடாக நுழைவுச் சீட்டுக்கள் விற்கப்பட்டுள்ளன. ☞ 2

## நாடாளுமன்றில் அமளிதுமளி

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்னவின் மதிப்பிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியன்த தெரிவித்த 'மகிழ்ச்சிப்படுத்தல்' தொடர்பான வார்த்தைப் பிரயோகத்துக்கு பிரதான எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையால் சபையில் அமளிதுமளியான நிலைமைகள் ஏற்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று ☞ 2

### கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த

# சுவஸ்திகாவை மீண்டும் அழையுங்கள் பல்கலை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பைக் காரணம்காட்டி கலைப்பீடாதிபதி ரகுராமால் இடைநிறுத்தப்பட்ட சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கத்தின் விரிவுரையை யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் மீளவும் அழைக்கப்பட்டு சட்டத்துறையில் தனது உரையினை வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தினை உருவாக்க யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர்கள், பல்கலைக்கழக நிருவாகம் ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் அவர்களின் உரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே ஒக்டோபர் 31 அன்று கலைப்பீடாதிபதி ரகுராமால் நிறுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் 'நெருக்கடியான காலத்தில் நீதித்துறையின் சுதந்திரம்' என்ற தலையங்கத்திலே உரையாற்ற இருந்தார். இந்த உரையாடல் இறுதி நேரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு பிரிவினரின் நெருக்கதலின் காரணமாக கைவிடப்பட்டது. இதற்கு மாணவர்களினால் சொல்லப்பட்ட காரணம் சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் தென்னிலங் ☞ 8

### கிரிகெட் சபைக்கான புதிய யாப்பை தயாரித்த

# சித்ரசிறி குழுவின் அறிக்கை அமைச்சரவை உபகுழுவிடம்

நாடாளுமன்ற சட்டம் ஒன்றின் ஊடாக இலங்கை கிரிக்கெட்டுக்கான புதிய யாப்பொன்றைத் அறிமுகம் செய்வதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் கே.டி. சித்ரசிறி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் கிரிக்கெட் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் தலைவர் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ☞ 8

# கிரிக்கெட் சபையை கலைப்பதற்கு நாடாளுமன்றில் இன்று விவாதம்

ஊழல் மோசடி நிறைந்த இலங்கை கிரிக்கெட் சபையை கலைப் பதற்கு முழு நாடாளுமன்றமும் ஒன்றிணைந்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பிரேரணை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இலங்கைகிரிக்கெட் ☞ 2

# சீனாவுடனான கடன் மறுசீரமைப்பை மற்றவர்கள் தெரிந்துகொள்வது கட்டாயம்

### என்கிறார் அமெரிக்கத் தூதுவர்

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையுடன் சீனாவின் எக்ஸிம் வங்கி மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் என்னவென்று ஏனைய கடன் வழங்குநர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமான விடயமென இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு ☞ 8

# கிராம அலுவர் வெற்றிடங்களை நிரப்ப டிசெம்பரில் போட்டிப் பரீட்சை

கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை இவ்வருடம் டிசம்பர் முதல் வாரத்தில் நடைபெறும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளதாக, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற் ☞ 8

# தம்மைத்தாமே பாதுகாப்பது பொலிஸாரின் கடமையே

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

பொலிஸ் சீருடை அணிந்துள்ளவர்கள் அவரவர் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு வழங்கமுடியாதென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன பெனிபிட்டிய முன்வைத்த கேள்விகளுக்கு விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள குழுவின் செயற்பாடுகளை ☞ 8

# நீர்க் கட்டண தேசியக் கொள்கை ஜனவரியில் வெளியிடப்படும்

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

நீர் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கையை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் விஜித ஹேரத் எம்.பி. நீர் கட்டணம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பில் பிரதமரிடம் எழுப்பிய கேள்விகளுக்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் அதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நீர் கட்டணம் மற்றும் நீர் விநியோகம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் ஆளும் கட்சியினரால் மேற்கொள்ளப் ☞ 2

# சட்டவிரோதமாக இலாபமடையும் சர்வதேச நிறுவனங்களுக்கு சேவையாற்றும் நாரா?

### நீதி அமைச்சர் ராஜபக்ஷ கேள்விக் கணை

நாரா நிறுவனம் இலங்கையின் கடற்பரப்பை பயன்படுத்தி சட்டவிரோதமாக இலாபமடையும் சர்வதேச நிறுவனங்களுக்கு சேவையாற்று கிறதாவெனக் கேள்வி எழுப்பிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நாட்டின் கடற்பரப்பை பயன்படுத்தும் கப்பல்களிடமிருந்து கட்டணம் அறவிடும்வரையை நாரா நிறுவனம் தயாரிக்காத காரணத்தால் வருடாந்தம் 60 பில்லியன் ரூபாவை இழக்க நேரிட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப் ☞ 2

# கைப்பற்றப்படும் போதைப் பொருள்களை என்னதான் செய்கிறீர்கள்? மைத்திரி கேள்வி

கைப்பற்றப்படும் பெருமளவிலான போதைப் பொருட்களை என்ன செய்கின்றீர்கள். நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஏன் அழிப்பதில்லை? என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பிரதமருடனான கேள்வி நேரத்தின் போதே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இதன் போது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரவை நோக்கி கேள்வி எழுப்பிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எனது ஆட்சி காலத்தில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் நீதிபதிகள் முன்னிலையில் அழிக்கப்பட்டன. கடந்த காலங்களில் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

அதன் அடிப்படையில் அன்றைய தினம் பல இளையோர் நுழைவு சீட்டுக்களைப் பெற்று தமது பெண் நண்பிகளையும் அழைத்துக் கொண்டு கொண்டாட்டத்திற்குச் சென்றுள்ளனர்.

டிஜே இசையுடன் ஆரம்பித்த கொண்டாட்டம் பின்னர் மது விருந்துடன்சூடுபிடிக்கதொடங்கியது. உச்சக்கட்டமாக போதைப் பொருள் பயன்பாட்டிற்குள்ளும் நுழைந்தது.

அங்கு வந்த சிலர், மது போதை தலைக்கு ஏறிய பின்னர் தாம் கொண்டு வந்திருந்த கஞ்சா, ஐஸ் போன்ற போதை பொருளையும் நுகரத் தொடங்கியதுடன் மற்றவர்











களுக்கும் அதனைப் பகிர்ந்துள் ளனர். கடும் போதையில் ஆட்டம் போட்டுள்ளனர்.

ஹோட்டலில்மதுபானம்மாத்திரமே வழங்க பட்டதாகவும், ஆனாலும் அங்கு வந்த பலரும் தம் வசம் உயிர்கொல்லி போதைப்பொருளை வைத்திருந்தனர் என்றும் விருந்தில் கலந்துகொண்ட பலர் தெரிவித்தனர்.

இத்தகைய நிகழ்வுகள் கொழும்பு மற்றும் வேறு நகரங் களில் இடம்பெற்று வந்திருக்கின் றன. அவற்றில் பலநிகழ்வுகள் பொலி ஸாரினால் தடுக்கப்பட்டுள்ளன.

அத்தகைய நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். சமூக வலைத்தளங்கள் ஊடாக இத்தயை 'பார்ட்டி'க்களுக்கு அழைப்பு விடுப்பவர்கள் மற்றும் அதில் கலந்துகொள்பவர்களுக்க எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இருப்பினும் யாழ்ப்பாணத்திலும் அத்தகைய ஒரு போதைப் 'பார்ட்டி' சத்தம் சந்தடியின்றி நடந்து முடிந்தி ருப்பது பேரதிர்ச்சியை ஏற்படுத் தியிருக்கிறது. இளைஞர்களின் எதிர்காலம்மேலும்மேலும்ஆபத்துக் கள் சூழ்ந்ததாக மாறிவருகிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் நியமனம் தொடர்பில் ஜனாதிபதியினால் 3 ஆவது தடவை யாகவும் அதன் பின்னரும் அனுப் பப்பட்ட பரிந்துரைகள் எதுவும் அரசமைப்பு பேரவையினால் உறுதிப் படுத்தப்பட்டு நியமிக் கப்படவில்லை. இது அரச மைப்பு பேரவையின் சக உறுப் பினர்களுக்கும் தெரியும். பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பாக 2 சந்தர்ப்பங்களில் தலா 3 மாதங்களுக்கு நியம னங்கள் வழங்கப்பட்ட போதி லும், இரண்டாவது நியமனம் வழங்கப்படும் போது, அடுத்த நியமனம் நிரந்தர நியமனமாக இருக்க வேண்டும் என அரசியலமைப்பு பேரவை ஜனாதி பதிக்கு கடிதம் அனுப்பியது.

பொலிஸ் மா அதிபரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்றாலும், அதனை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க அரசமைப்பு பேரவைக்கும் அதிகாரம் உள்ளது. அரசமைப்பின் ஏற்பாட்டு விதிகளை வியாக்கியானம் செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார்.

இதனையடுத்து எழுந்த தேசிய சுதந்திர முன்னணியின்தலைவரும் சுயாதீன உறுப்பினருமான விமல் வீரவன்ச, பதவிக்காலம் முடிந்த பொலிஸ்மாஅதிபருக்குதொடர்ந்தும் பதவி நீடிப்பு வழங்கப்படுகின்றது. எனினும் இதற்கு அரசியலமைப்பு பேரவைஅனுமதிவழங்கவில்லை. அதனால் பொலிஸ்மா அதிபரின் பதவி நீடிப்பு சட்ட ரீதியானது அல்ல. எனவே இது தொடர்பில் அரசு நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த சபைக்கு தலைமைதாங்கிய பிரதிசபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் நியமனம்தொடர்பில்நாம்விவாதிக்க முடியாது என்றார்.

அப்போது மீண்டும் எழுந்த விமல் வீரவன்ச, நீங்கள் ஜனாதிபதியின் பிரதிநிதியல்ல. எனவே நீங்கள் இது தொடர்பில் பதிலளிக்கத் தேவையில்லை. இங்கு பிரதமர் மற்றும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் உள்ளார்கள். அவர்கள் பதிலளிக்க முடியும் என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், சட்டத்தின் அடிப்படையில் தற்போது நாட்டில் பொலிஸ்மா அதிபர் இல்லை. ஜனாதிபதி வேண்டுமென்றே அரசமைப்பை மீறி பதவி முடிந்த பொலிஸ்மா அதிபருக்கு பதவி நீடிப்பைவழங்கிவருகின்றார்.எனவே அரசமைப்பைமீறிய குற்றச்சாட்டில் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டு வரமுடியும் என்றார்.

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமைபிரதிசபாநாயகர்அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விநேரத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன, ஓய்வூதியர்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்ட கேள்விக்கு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியன்த பதிலளித்தார். எனினும் இராஜாங்க அமைச்சரின் குறித்த பதிலால் தான் மகிழ்ச்சியடைய முடியவில்லையென ரோஹினி குமாரி தெரிவித்தார்.

இதன்போது, இராஜாங்க அமைச்சர் குறித்த கேள்விக்கான விடைகளை அமைச்சினால் எழுத்து மூலம் வழங்கப்படும் பதிலையே எமக்கு வழங்க முடியும். ரோஹினி குமாரியை எவ்வாறு மகிழ்ச்சிப்படுத்துவதென எனக்குத் தெரியாது. அவரை வேறு விதத்தில் மகிழ்ச்சிப்படுத்த ஏதாவது இருக்குமானால் அதனை செய்துகொள்ள முடியும் என்றார்.

இராஜாங்க அமைச்சரின் இந்தக் கூற்று ரோஹினி கௌரவத்தை பாதிப்பதுடன் பொருத்தமில்லாத இந்த வார்த்தையை ஹன்சாட்டில் இருந்து அகற்றுமாறும் இராஜாங்க அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும்எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ஆசனங்களில் இருந்து எழுந்து பிரதி சபாநாயகரை தொடர்ந்து வலியுறுத்தினார்கள்.

இராஜாங்க அமைச்சரின் குறித்த கூற்றுரோஹினிமீதானஅவதூறான வார்த்தை. இதற்காகஅவர்மன்னிப்பு கோரவேண்டுமெனஎதிர்க்கட்சியின் பிரதமகொறடாலக்ஷ்மன்கிரியெல்ல, நளின் பண்டார, சமிந்த விஜேசிறி ஆகியோர்சத்தமிட்டுகோரிவந்தனர். அத்துடன் ரோஹினி குமாரி, சமிந்த விஜேசிறி, மரிக்கார். நளின்பண்டார, அசோக்க அபேசிங்க ஆகியோர் சபை மத்திக்கு வந்து, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாறு கோரினர்.

இதன்போது, எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச, ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியவாறு, பெண்களை அகௌரவப்படுத்தும் இவ்வாறான வார்த்தைகளை அனுமதிக்க முடியாது. இதற்கு முன்னர் ஆளும் கட்சி பெண் உறுப்பினர் ஒருவருக்கும் எதிராக இந்த சபையில் பொருத்தமற்ற வார்த்தை பிரயோகம் மேற் கொண்டதாக தெரிவித்து, பிரத மர் சபை நடவடிக்கையை தற்கா லிகமாக இடைநிறுத்தி, சபாநாயகர் தலைமையில் அது தொடர்பாக கலந்துரையாடி, பின்னர் அந்த உறுப்பினருக்கு எதிராக தீர்மானம் ஒன்றை எடுத்தார். அப்படியாயின் எதிர்க்கட்சியில்பெண்உறுப்பினருக்கு அவ்வாறானதொருநிலைஏற்பட்டால் அதனை சாதாரணமாக கொள்ள முடியாது. அதனால் உடனடியாக இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து சபைக்கு தலைமைதாங்கிய பிரதி சபாநாயகர் இராஜாங்க அமைச்சரை நோக்கி, இந்த வார்த் தையை எந்த நோக்கத்தில் தெரிவித் தீர்கள் என்பதை உங்களால் விளக்க மளிக்க முடியுமா எனக் கோரிய போது, அதற்கு இராஜாங்க அமைச்சர் தெரிவிக்கையில், நான் உண்மையாகவே இதனை தெரிவித்தேன். மாறாக வேறு கருத்தில் தெரிவிக்கவில்லை. எதிர்க்கட்சியே இதனை வேறு அர்த்தப்படுத்தியுள்ளனர் என்றார்.

அதனைத் தொடர்ந்து ஒழுங்குப்பிரச்சினையை எழுப் பியவாறு எழுந்த இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, இராஜாங்க அமைச்சர் கூறிய விட யத்தில்ரோகினியைமகிழ்ச்சிப்படுத்த எமக்கு தெரியாது என்ற விடயம் பொதுவானதாகும். ஆனால் அதன் பிறகு தெரிவித்த விடயத்தை ஒரு பெண் என்றவகையில் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

தொடர்ந்து அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் மோசமான வார்த்தை பிரயோகங்களால் முழு நாடாளுமன்றத்துக்குமே அவப்பெயர் ஏற்படுகிறது. அதனால் இவ்வாறான மோசமான வார்த்தை பிரயோகங்களை பாவிப்பதற்கு எதிராக யாராக இருந்தாலும் அவர்க ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் என்றார்.

பிரதிசபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, ரோஹினி எம்.பி.க்கு அநீதி ஏற்பட்டி ருந்தால் அதற்கு தேவையான நடவடிக்கை எடுப்போம். அதே நேரம் நடாளுமன்றத்துக்கு பொருத் தமில்லாத வார்த்தைகளை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன். அத்துடன் இது தொடர்பாக சபாநாயகருக்கும் அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுத்து சபைக்கு அறிவிக்கிறேன் என்றார்.

## சட்டவிரோதமாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித் ததாவது:

நாட்டின் கடல் எல்லையை கண்காணிக்கும் பொறுப்பு தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துக்கு (நாரா) வழங்கப்பட்டுள்ளது.நாட்டின் கடல் எல்லையைபயன்படுத்தும்படகுகள் மற்றும் கப்பல்கள் இலங்கைக்கு கட்டணம் செலுத்த வேண்டும்.

தெற்கு கடற்பரப்பில் ஒரு நாளைக்கு மாத்திரம் 310 கப்பல்கள் பயணிக்கின்றன. வருடாந்தம்சுமார் 35 ஆயிரத்துக்கும் அதிகமான கப்பல்கள் இலங்கையில் கடல் எல்லையை பயன்படுத்துகின்றன. இலங்கையின் கடல் எல்லையை பகுதியாக பிரித்து கட்டணம் அறவிடும் வகையில் வரைவு ஒன்றை தயாரிக்கும் பொறுப்ப நாரா நிறுவனத்துக்கு 1991ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.ஆனால் இதுவரை நாரா நிறுவனம் அந்த வரைபை தயாரிக்கவில்லை.

இலங்கையின் கடற்பரப்பை பயன்படுத்தும் கப்பல்களிடமிருந்து கட்டணம் பெறும் வரையை பிரித்தானிய நிறுவனம் தயாரித்து இலாபம்பெறுகிறது.இந்த நிறுவனம் நாராவுக்கு சதவீதமளவிலாவது கட்டணம் செலுத்துகிறதா என்பதை அறியவில்லை.

கடல்எல்லையைவகுத்துவரைபு தயாரிக்கும் திறமையானவர்கள் நாரா நிறுவனத்தில் இல்லை. மறுபுறம் தொழில்நுட்ப வளமும் நாரா நிறுவனத்தில் இல்லை. நாரா நிறுவனம் இலங்கைக்கு சேவை செய்கிறதா அல்லது இலங்கையின் கடல் எல்லையை சட்டவிரோதமாக பயன்படுத்தி வரைபு தயாரித்து இலாபமடையும் நிறுவனத்துக்காக செயற்படுகிறதா என்பது பிரச்சினைக்குரியது.

நாரா நிறுவனம் கடந்த 33 வருடங்களாக குறித்த வரைபை தயாரிக்காதகாரணத்தால் இலங்கை வருடாந்தம் சுமார் 60 பில்லியன் ரூபாவை இழந்துள்ளது. இதுவும் ஒருவகையான மோசடியே. நாரா நிறுவனத்தின் குறைப்பாட்டால் அரச வருமானத்தை தொடர்ந்து இழக்க கூடாது என்பதற்காக நீரியல் வளங்கள் மேம்பாட்டு தொடர்பான சட்ட வரைபை சமர்ப்பித்தேன்.

நாராநிறுவனத்தின்அதிகாரத்தை நீதியமைச்சர் கைப்பற்ற முயற்சிப்பதாக பிரதான பத்திரிகை ஒன்றுசெய்தி வெளியிட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது. நாராவின் அதிகாரத்தை நான் கைப்பற்றி ஒன்றும் செய்ய போவதில்லை. இழக்கப்படும் வருமானத்தை முறையாக பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனே சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

## கிரிக்கெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் ஊழல் மோசடிகள் தொடர்பில் சபையில் நீண்ட விளக்கம்ஒன்றைமுன்வைத்ததைத் தொடர்ந்து, இலங்கை கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகளை இல்லாமலாக்குவதற்கு இலங்கை கிரிக்கெட் சபையை உடனடியாக கலைக்கவேண்டும்எனதெரிவித்து முழுநாடாளுமன்றமும்இணைந்து நாடாளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்ற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜீத் பிரேமதாச பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

குறித்த பிரேரணைக்கு எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஆதரவு தெரிவித்ததைத்தொடர்ந்தும்ஆளும் கட்சியும்அதற்குஎதிர்ப்புதெரிவிக்காத நிலையில், அது தொடர்பில் கட்சித் தலைவர்களின்கூட்டத்தில்தீர்மானம் மேற்கொள்ளவோம் என சபைக்கு தலைமைதாங்கிய பிரதிசபாநாயகர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சபை நடவடிக்கையை சுமார் ஒரு மணி நேரம் வரை தற்காலிகமாக ஒத்திவைத்து கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது.

அதன் பிரகாரம் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி, நாளை(இன்று) இலங்கைகிரிக்கெட் சபை தொடர்பாக விவாதித்து, இலங்கை கிரிகெட் சபையை உடனடியாக கலைத்துவிடவும் இடைக்கால குழு கிரிக்கெட் சபை யின் நடவடிக்கைகளை முன்னெ டுத்துச்செல்லவும் பிரேரணை நிறைவேற்றி வாக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கைப்பற்றப்படும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தொகையான போதைப் பொருட்கள்கைப்பற்றப்பட்ட ஆனால் அவை அழிக்கப்படவில்லை. கைப்பற்றப்படும் போதைப் பொருட்களைஎன்னசெய்கின்றீர்கள், ஏன் அழிப்பதில்லை என்பதை வெளிப்படுத்துங்கள் என்றார்.

அதற்குப்பதிலளித்தபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கைப்பற்றப்படும் போதைப் பொருட்களை வனாத்தவில்லு பகுதியில் வைத்து அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஒரு தொகை போதைப்பொருட்களை மாதிரியாக வைத்துக் கொண்டு ஏனையவற்றை நீதிமன்ற அனுமதியுடன் அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மத்திய வங்கிச் சேவையாளர்களுக்கு 29.27 சதவீத வட்டி ஊழியர் சேமலாப நிதிய கணக்குகளுக்கு 9 சதவீத வட்டி

## இது எந்தளவுக்கு நியாயம் என்கிறார் கெவிந்து

மத்திய வங்கியின் அலுவலர்களின் சேமலாப நிதியத்தின் கணக்கு மீதிகளுக்கு 2022 ஆம் ஆண்டு 29.27 சதவீத வட்டி வழங்கப்பட்டுள்ளது.

மறுபுறம் ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்கு மீதிக்கென 9 சதவீத வட்டி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த வட்டி வீதங்களுக்கு இடையில் வித்தியாசம் பேணப்படுவதற்கான காரணம் என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க நிதி இராஜாங்க அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரப் பாதிப்பின் சுமை ஒட்டுமொத்த மக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் இறுதி சேமிப்பை சூறையாடி அதனூடாக பொருளாதார மீட்சி பெறலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு அரசாங்கம் செயற்படுவது கவலைக்குரியது.

மத்திய வங்கியின் சேவையாளர்களின் சேமலாப நிதியத்தின் கணக்கு மிகுதிக்கென 2022 ஆம் ஆண்டு 29.27 சதவீத வட்டி வழங்கப்பட்டுள்ளது.

மறுபுறம் ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்கு மிகுதிக்கென கடந்த ஆண்டு (2022) 9 சதவீத வட்டி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் கணக்கு மிகுதிக்கென 8.75 சதவீத வட்டி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிதியங்களின் கணக்கு மிகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வட்டி வீதங்களுக்கு இடையே பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது.

மத்திய வங்கியின் சேவையாளர்களின் கணக்குகளுக்கு 29.27 சதவீத வட்டி வழங்கப்படுவதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் உழைக்கும் மக்களின் சேமலாப



நிதிய கணக்குகளுக்கு 9 சதவீத குறுகிய வட்டி வழங்கப்படுவது எந்தளவுக்கு நியாயமாகும். எதிர்காலத்தில் இந்த 9 சதவீத வட்டி வழங்கப்படுமா என்பதும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# இந்திய இழுவைப்படகை எமது கடற்பரப்பில் ஒரு வினாடியும்கூட அனுமதிக்கக்கூடாதாம்!

## அமைச்சர் டக்ளஸ் காட்டம்

கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்துடன் இந்திய இழுவைப்படகை எமது கடற்பரப்பில் ஒரு வினாடி கூட அனுமதிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு. -என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கடற்றொழில் நீர் வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர் நிரோஷன் பெரேரா உரையாற்றும்போது எழுப்பிய கேள்விகளுக்குப்; பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். நிரோஷன் பெரேரா எம். பி. குறிப்பிடுகையில் -

பிரதமர் இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடற்பரப்பில் அனுமதி வழங்குவது தொடர்பில் இந்திய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார். அது தொடர்பில் கலந்துரையாடப்படுவதாக கூறினார். அண்மையில் ஜனாதிபதி இந்தியாவுக்கு சென்ற போது கச்சதீவையும் வடக்கு கடலையும் வழங்கிவிட்டார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது தொடர் பில் வடக்கு கடற்றொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளனர். கடற்படையும் அமைச்சும் மிகவும் வேகமாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.? இன்று மீனவர்களுக்கு வாழ்வதற்கு வழியில்லை. இன்று வரை அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.? எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை? இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்ன? - என்றார்.

இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பில் நானும் இணங்குகிறேன். நானும் அதில் மிகவும் தீவிரமாக இருக்கின்றேன். ஆனால் அது தொடர்பில் பிரதமரோ அல்லது வெளிவிவகார அமைச்சரோ அதனை ஏற்றுக் கொண்டு இந்தி ஊடகங்களுக்கு சொன்னதாக எனக்கு ஞாபகத்தில் இல்லை. இந்திய இழுவைப் படகை எமது கடற்பரப்பில் ஒரு



வினாடி கூட அனுமதிக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு.

அத்துடன் கச்சதீவு தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவில் தேர்தல் நடப்பதால் ஏட்டிக்கு போட்டியாக அங்கு இது தொடர்பாக கருத்துக்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 74 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கச்சதீவு உடன்படிக்கையால் நாம் 84 வீதமான வளங்களை இந்தியாவுக்கு வழங்கியுள்ளோம்.

அத்துடன் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் நான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றேன். - என்றார். (05)

# சாகல விளையாடிய விளையாட்டு என்ன ? விமல் விளையாட்டு அமைச்சரிடம் கேள்வி

விளையாட்டு சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சர் முன்வைத்த வரைவை ஆராய சாகல ரத்நாயக்க தலைமையில் குழு நியமிக்கப்பட்டதாகக்; குறிப்பிடுகின்றமை மிக மோசமானதாகும். சாகல விளையாடிய விளையாட்டு என்ன என்று குறிப்பிட முடியுமா என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை நோக்கி கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது கிரிக்கெட் நிறைவேற்று குழு நீக்கம், இடைக்கால குழு நியமனம் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் குறுக்கிட்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

அமைச்சரால் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட சட்டமூல வரைவு தொடர்பில் அமைச்சரவை உப குழு நியமிக்கப்படுவது இயல்பானதே. விளையாட்டுத்துறை அமைச்சர் முன்வைத்த வரைவை ஆராய்வதற்கு ஜனாதிபதியின் அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையில் குழு நியமிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிடுகின்றமை மிக மோசமானதாகும். சாகலவுக்கு கிரிக்கெட் விளையாட்டு பற்றி என்ன தெரியும், அவர் விளையாடிய விளையாட்டு என்ன, மாறுபட்ட திருத்த யோசனைகளை சாகல ரத்நாயக்க முன்வைத்துள்ளார் என அமைச்சர் குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் அமைச்சருக்கு அப்பாற்பட்ட வகையில் சாகல ரத்நாயக்க செயற்படுகிறார்.

கிரிக்கெட் நிறைவேற்றுக்குழு நிர்வாகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி தவறுகளை திருத்திக்கொள்ள அமைச்சர் உரிய நடவடிக்கைகள் எடுத்தாலும் நிறைவேற்றுத்துறை அதற்கு எதிராக செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாட்டின் பிரதிபலனை அவரை தெரிவு செய்தவர்கள் தற்போது அனுபவிக்கிறார்கள். - என்றார். (05)

# மத்திய மாகாணப் பாடசாலைகளுக்கு தீபாவளிக்காக 13ஆம் திகதி விடுமுறை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் இது தொடர்பான கோரிக்கையை மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு.கமகேவிடம் விடுத்திருந்தார்.

அந்த கோரிக்கையை ஏற்று திங்கட்கிழமை விடுமுறை வழங்குவதற்கும், அந்த நாளுக்குரிய கல்வி நடவடிக்கையை ஈடு செய்வதற்காக எதிர்வரும் சனிக்கிழமை மத்திய மாகாணத்தில் தமிழ் பாடசாலைகளை நடத்துவதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

தமது கோரிக்கையை ஏற்று, தமிழர்களின் முக்கிய பண்டிகைகளுள் ஒன்றான தீபாவளிக்கு விசேட விடுமுறை வழங்க நடவடிக்கை எடுத்த ஆளுநருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் நன்றி தெரிவித்துள்ளார். (05)

# வட, கிழக்குக்கு சென்ற இந்திய நிதியமைச்சர் மலையக பகுதிகளுக்கு எதற்காக வரவில்லை

## வேலுகுமார் கேள்வி



அரச நிதி செலவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 'நாம் 200' என்ற நிகழ்வை நடத்தி மலையக மக்களை தரக்குறைவாக சித்திரித்துள்ளமைக்குக் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மலையக மக்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்றார். மலையகத்துக்கு செல்லவில்லை. அரச அனுசரணையுடன் இ.தொ.க.அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளது. தொண்டமான் பரம்பரைக்கு முடியாததை நான் சாதித்துள்ளேன் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

மலையகம் 200 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதனை தேசிய நிகழ்வாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஓர் அரசியல் கட்சி தமது கட்சி கூட்டமாக அரச செலவுகளில் இந்த நிகழ்வை நிறைவு செய்தது. மலையக மக்கள் தமது அபிமானத்தை இழந்து அவமானம் படும் அளவுக்கு இந்த நிகழ்வின் பெறுபேறு தற்போது காணப்படுகிறது.

நாகபாம்பு படமெடுத்து ஆடுவதை பார்த்து நாக்கலி பூச்சி படமெடுத்து ஆட முற்பட்ட கதைக்கு இணையாகவே இந்த அரசியல் கட்சியின் செயற்பாடு காணப்படுகிறது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாரத பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தந்தார். அப்போது அவரை நாங்கள் மலையகத்துக்கு அழைத்து சென்று மலையகத்தை பெருமைப்படுத்தினோம். மலையகத்தின் பல பிரச்சினைகளை நேரடியாக எடுத்துரைத்து 10 ஆயிரம் வீடுகள் திட்டத்துக்கான உறுதியை பெற்றுக்கொண்டோம்.

மலையக மக்களின் 200 ஆண்டுகால நிறைவை பற்றிக் கூறும் அரசாங்கம் மலையக மக்களுக்கு என்ன செய்துள்ளது? சம்பளப்; பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படவில்லை. அல்லது பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் மலையக மக்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டனவா அல்லது மலையகத்தின் சுகாதாரம் மற்றும் கல்வித் துறையை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா ஏதும் இல்லை. போலியான வாக்குறுதிகள் மாத்திரமே மிகுதியாகியுள்ளன.

நாம் 200 என்ற வெற்று நிகழ்வை நாங்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். நாம் 200 நிகழ்வில் சிறப்பு அதிதியாக இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். அவர் கொழும்புக்கு வருகை தந்தார். கண்டிக்கு சென்றார். கிழக்கு மற்றும் வடக்குக்கு சென்றார். ஆனால் மலையகத்துக்கு செல்லவில்லை. ஆனால் மலையக மக்களைக் கௌரவிக்கும் நாம் 200 ஆண்டு நிகழ்வில் கலந்துகொண்டார்.

மலையக மக்களுக்கும், இந்திய தேசத்தின் தமிழகத்துக்கும் இடையில் தொப்புள் கொடி உறவு காணப்படுகிறது. மலையக 200 நிகழ்வு தொடர்பில் தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுப்பிய வாழ்த்துச் செய்தி நாம் 200 நிகழ்வில் ஒளிபரப்பப்படவில்லை. ஆகவே மலையக மக்களை கௌரவிப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் நாடகம் மற்றும் அரசியல் கூத்தை அரங்கேற்றியுள்ளது.

2017 ஆம் ஆண்டு உறுதியளிக்கப்பட்ட 10 ஆயிரம் வீட்டுத் திட்டங்களை இந்திய நிதியமைச்சர் மீண்டும் நினைவுப்படுத்திச் சென்றுள்ளார். மறுபுறம் 2000 ஆம் ஆண்டு முதல் பேசப்படும் 10 பேச்சர்ஸ் காணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார். இந்த நாடாளுமன்றத்தை மூன்று தொண்டமான்கள் பிரதிநிதித்து வப்படுத்தியுள்ளார்கள். இவர்களால் கடந்த 40 வருட காலம் செய்ய முடியாததை நான் 2015 - 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் செய்து முடித்துள்ளேன். கண்டி மாவட்டத்தில் மலையக தோட்ட அபிவிருத்திக்கு சொந்தமான லிட்வெளி தோட்டத்தில் உள்ள சகல லயன் அறைகளையும் ஒதுக்கி 110 குடும்பங்களுக்கு 10 பேச்சரஸ் காணியை ஒதுக்கி அதற்கான உறுதி பத்திரத்தை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தேன். தொண்டமான் பரம்பரையில் உள்ளவர்களில் எவருக்காவது இதனை சாதிக்க முடியுமா? தோட்ட லயன் அறைகளை ஒதுக்கி காணி உறுதிப்பத்திரத்துடன் காணிகளை வழங்க முடியுமா? என்று தொண்டமான்களுக்கு சவால் விடுக்கிறேன். தமது சுயநல அரசியல் தேவைகளுக்காக நாம் 200 என்ற நிகழ்வை நடத்தி மலையக மக்களை தரக்குறைவாக நடத்தியதற்கு வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## துளிர்த்த நம்பிக்கை

அரகலய போராட்டம் மூலம் பொதுவெளியில் அறியப்பட்டவரான சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்ற இருந்த உரை மாணவர்களில் ஒரு தரப்பினரின் அழுத்தம் காரணமாக கலைப்பீடாதிபதியால் தடுத்து நிறுத்தப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இன்னும் சொல்லப்போனால் பல்கலைக்கழகத்தின் அறிவுசார் தகுதிநிலை குறித்த கேள்விகளையும் விமர்சனங்களையும் அது கடுமையாக எழுப்பியி–ருந்தது. மாணவர்கள் மற்றும் அறிவுசார் பேராசிரியர்களின் சகிப்புத்தன்மை குறித்த மிக மோசமான கண்ணோட்டத்தையும் இது எழுப்பியிருந்தது.

பல்கலைக்கழகதின் அறிவுசார் நடத்தைக்குச் சற்றுப்பொருத்தமில்லாத – குறுகிய மனோநிலையைக் கொண்ட – இந்தச் செயற்பாடு மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிவர்த்தி செய்யும் வகையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இப்போது ஓர் அறிக்கையை விடுத்துள்ளது. சுவஸ்திகாவின் உரை தடுத்து நிறுத்தப்பட்டது தொடர்பில் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ள பல்கலைக்கழகம், அனைத்துத் தரப்பினரும் இணைந்து சுவஸ்திகாவின் உரை மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது, யாழ். பல்கலைக்கழகம் தனது அறிவுசால் புலமையையும் அறத்தையும் இழந்துவிடவில்லை என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் சுவஸ்திகா அருள்லிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பாசிச அமைப்பு, தமிழ்ச் சமூகத்தினுள் உருவாகியுள்ள புற்றுநோய், போர் முடிகின்றபோது அரசியல் ரீதியாக அதை எவ்வாறு கையாள்வது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை, முள்ளிவாய்க்கால் படுகொலையில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இறந்தமை இவர்களின் பிடிவாத அரசியலின் விளைவே, பல எதிரிகளைக் கொன்று, தமக்கு உடன்படாத பல தமிழர்களையும் கொன்று, சிறுவர்களைப் போருக்குச் சேர்த்து, தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு வாய்ப்பளிக்காத கொடூர பாசிச அமைப்பு அது என்று தெரிவித்திருந்தார்.

தமிழர்களில் பெரும்பான்மையானவர்களைக் காயப்படுத்திய கருத்து இது. தன்னிகரற்ற உச்சபட்ச ஈகத்திற்குப் பெயர்போன தமது விடுதலைப் போராட்ட அமைப்பை, அதன் அக, புறச் சூழல்கள் பற்றிய புரிதல் ஏதுமின்றி சிங்களவர்களைத் திருப்திப்படுத்துவதற்கான கருத்துக்களாகவே சுவஸ்திகாவின் கருத்துக்களை அவர்கள் காண்கிறார்கள். பல்கலைக்கழக மாணவர்களில்ஒருதொகுதியனருக்கும்அதுஅப்படித்தெரிந்ததில் ஆச்சரியமில்லை. அதனால் அவர்கள் சுவஸ்திகாவிற்குத் தமது எதிர்ப்பைப் பதிவு செய்ய முயற்சித்தமைகூட ஏற்புடையதே. இருப்பினும் மாணவர்களின் கோபத்தையும் எதிர்ப்பையும் காரணம்காட்டி நிகழ்வை பல்கலைக்கழகம் நிறுத்துவதற்கு நிர்வாகம் இடமளித்தமையே இங்கு பெரும் தவறு.


யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் இந்தத் தவறை ஏற்றுக்கொண்டுள்ளது. ”மாணவர்களின் நெருக்குவாரத்துக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் பணிந்து சென்றமையும் ஒரு தவறான செயலாகும். எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெறாது இருப்பதனை மாணவர்களும், நிர்வாகமும் உறுதி செய்வது அவசியம். பல்கலைக்கழகம் என்பது அறிவுசார் கருத்துப் பரிமாற்றங்களுக்குரிய ஒரு களம். வெவ்வேறு பட்ட அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் எந்தத் தடைகளும் இல்லாத வகையிலே உரையாடுவதற்கும், விவாதிப்பதற்கும் உரிய வெளியும், சுதந்திரமும் பல்கலைக்கழகத்தினுள் இருப்பது பல்கலைக்கழகத்தின் அறிவு சார் செயன்முறைகளுக்கு மிகவும் அவசியம்” என்று சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை வெளியிட்டு பல்கலைக்கழகத்தின் அடிப்படைப் பற்றுறுதியை மீளவும் வலியுறுத்தியுள்ள இதே பல்கலைக்கழக ஆசிரியர்கள் மத்தியிலேயே மாணவர்களின் கருத்தோடு தானும் ஒத்துப்போனதன் காரணமாக நிகழ்வை இடைநிறுத்திய பேராசிரியதும் இருக்கிறார் என்பதுதான் வரலாற்றின்கொடுமை. தமக்குள்ஒருவர்செய்ததவறைபூசிமெழுகி மறைக்க முற்படாமல் அதனைத் தவறு என்று ஏற்–று அதற்குப் பரிகாரமாக பல்கலைக்கழகத்தின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து சுவஸ்திகாவை அவரது விரிவுரைக்காக மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கவேண்டும் என்கிற ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை வரவேற்பிக்குரியது. பாராட்டுக்குரியது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தனது எதிர்வினையைப் பதிவு செய்வதற்கு ஆசிரியர் சங்கம் எடுத்துக்கொண்ட காலப்பகுதி சற்று அதிகமானதுதான் என்கிறபோதும் அது காத்திரமாகத் தனது கருத்தைப் பதிவு செய்தது மட்டுமன்றி அதன் நியாயத்தை மாணவர்களிடம் எடுத்துச் செல்வதற்கும் முற்பட்டிருப்பதும் சிறப்பானது.

# பாலியல் கொடுமைகளும் எம் சமூகமும்

**வி.கமந்தி**



பேரா. ஹரேந்திர டி சில்வா



ஷர்மிளா கோனாவல

கடந்த ஒக்டோபர் 13ஆம் திகதி கும்பகெட்டே காவல் நிலையத்தில் பாலியல் வன் கொடுமை தொடர்பாக ஒரு முறைப்பாடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவர் 15 வயது சிறுமி.

நிககொல்ல வீதியில் ஒரு பேருந்தில் கும்புகேட் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மூன்று பேர் அவளை இந்தக் கொடூரத்திற்கு ஆளாக்கினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு ஒக்டோபர் 23 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். குற்றத்திற்கு உதவினார்கள் என்கிற குற்றச்சாட்டில் பேருந்துச் சாரதி மற்றும்நடத்துனரும்கைதுசெய்–யப்பட்டனர். பிரதான சந்தேகநபர் 23 வயதுடையவர். சம்பவத்தின் பின்னர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது. ஒரு வாரத்திற்குள் பதிவாகிய சில சம்பவங்களில்இந்தச்சம்பவமும் ஒன்று. குழந்தைகள் பாதுகாப்பு பிரச்சினை ஒரு முக்கியமான கட்டத்தைஎட்டியுள்ளதுஎன்பதை இது உணர்த்துகின்றது, ஆனால் பெண்களும் சிறுமிகளும் தொடர்ந்து அரசியல் லாபம் ஈட்டுவதற்கான கருவிகளாக சித்தரிக்கப்படுகிறார்கள்.

கும்பகெட்டே சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தைப் பொலிஸார் வெளியிட்டனர் என்று சமூக ஊடகங்களில் கூறப்படும் கூற்றுக்களை மறுத்த பொலிஸ்ஊடகப்பேச்சாளர்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா, பாதிக்கப்பட்டவரின் தனிப்பட்ட விவரங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளியிடப்படவில்லை என்று தெரிவித்தார். சம்பவம் ஒக்டோபர் 11 நடந்தது. அது தொடர்பில் மாணவியின் தாய் ஒக்டோபர் 13 முறைப்பாடு செய்தார். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பல தவறான தகவல்கள் பகிரப்பட்டன. சில ஊடக அறிக்கைகள் இந்த சம்பவத்தை கற்பழிப்பு என்று குறிப்பிடுகின்றன என்று எஸ் எஸ்பி தல்துவா கூறினார். முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர்கள் உடனடியாககைதுசெய்யப்பட்டன் என்றும் அவர் கூறினார்.

இத்தகைய வன்முறைகளுக்கு எமது சமூகத்தின் பழக்க வழங்கங்களே காரணம் என்று நகர்ப்புற குடிமக்கள் அமைப்பின் தலைவி ஷர்மிளா கோனாவல தெரிவித்தார். குழந்தைகளை வடிவமைப்பது முன்பள்ளியில் இருந்தே தொடங்க வேண்டும். பள்ளி பாடத்திட்டம் சமூக விழுமி–யங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். சமூக விழுமி–யங்கள் மற்றும் பொது இடங்களில் பாதுகாப்பை உறுதி செய்வது போன்ற விழிப்புணர்வை ஊக்குவிக்கும் நாடகம், இசை மற்றும் நடனம் போன்றவற்றில் குழந்தைகளை பங்கேற்க ஊக்குவிக்கவேண்டும். ஆனால் இங்கு அப்படி எதுவும் நடப்பதில்லை. ஒரு பெண்ணை மதிக்கவேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி ஆண் குழந்தைகளுக்குக் கற்பிக்கவேண்டும், என்கிறார் கோனாவல.

15 வயது சிறுமி பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டது குறித்து பேசிய கோனாவல, பாதிக்கப்பட்டவர்கள் எல்லா நேரங்களிலும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய ஒருங்கிணைந்த முயற்சி தேவை என்றார். ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் ஒரு சமூக பொலிஸ் பிரிவு, ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஒரு சமூக அபிவிருத்தி குழு மற்றும் பல உள்ளன. ஆனால் இந்த சட்ட அமலாக்க பிரிவுகளின் ஒருங்கிணைப்பில் குறைபாடுகள் உள்ளன. மற்றப் பணிகளில் பெண் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவதனால், காவல் நிலையத்தில் முறையிட பாதிக்கப்பட்டவர்களுக்கு உகந்த சூழல் இல்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் காவல்துறையிலும் நீதிமன்றத்திலும் துஷ்பிரயோகம் செய்யப் படுகிறார்கள். ஊடகங்கள்கூட பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள விதிகளுக்கு இணங்க நடப்பதில்லை. குற்றவாளிகளுக்கு நல்ல வழக்கறிஞர்கள் கிடைப்பதால், பாதிக்கப்பட்டவர் நீதியைப் பெறுவதற்கான திறன் மேலும் முடங்குகிறது. எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை எவ்வாறு உறுதிப்படுத்து–வது என்பதில் அதிக அக்கறை காட்டப்படவேண்டும் என்று கோனாவல வலியுறுத்துகின்றார்.

நமது அரசியல்வாதிகளுக்கு குழந்தைப்பருவக்கல்வி இல்லை. குழந்தை பருவக் கல்வி என்பது பள்ளி மாணவர்களுக்கு வண்ண பென்சில் மற்றும் புத்தகங்களை விநியோகிப்பது அல்ல. கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கு ஒரு முழுமையான அணுகுமுறை உள்ளது, என்று கோனாவல விளக்கினார்.

தண்டனையின்மை, சட்டத்தின் செயல்திறன் இல்லாமை, லஞ்சம், தணிக்கை முறைகளின் பற்றாக்குறை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை வன்முறை மற்றும் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு எரியூட்டும் நிர்வாகத்தின் சில முக்கிய பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. கொள்கைகள் மற்றும் சட்டங்களை வரையறுப்பதைத் தவிர, இந்த சட்டங்களை நடைமு–றைப்படுத்துவதில் அதிகாரிகளைப் பொறுப்பாக்குவதும் முக்கியம் என்று சிரேஷ்ட குழந்தை நல மருத்துவரும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவுனருமான பேராசிரியர் ஹரேந்திர டி சில்வா தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க சட்டத்திற்கு அடிப்படை தேவை. வன்முறை, வன்புணர்வு மற்றும் துஸ்பிரயோக வழக்குகளுக்கு எதிராகச் சட்டங்களை (குறைந்தது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு) செயல்படுத்த அதிகாரிகள் இருக்க வேண்டும். பெரும்பாலான தருணங்களில் தணிக்கை முறை இல்லாததால், ஒதுக்கப்பட்ட நிதியில் இந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்பதைப் பார்ப்பது கடினமாகும். மடிக்கணினிகள் போன்ற பௌதீக வளங்களைப் பார்ப்பதைவிட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைநாம்பார்க்கவேண்டும்என பேராசிரியர் டி சில்வா கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தங்கள் கடமை தொடர்பான எந்தவொரு விடயத்திற்கும் பொறுப்புக்கூறுவது முக்கி யம். இங்கு தகுதியின் அடிப்படையில் உயர் பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படுவதில்லை. இந்த நியமனங்கள் வரும்போது குரோனிசம் மற்றும் நேபாட்டிசம் விதிகள்தான் பயன்பாட்டில்உள்ளன. ஏனெனில் உயர் பதவி நியமனம் பெற்றவர்கள் பள்ளி போன்றவற்றில் கூட்டாளிகள் அல்லது அவர்கள் அரசியல் படிநிலையில் உள்ளவர்களுடன் தொடர்புடையவர்கள். எனவேநிபுணத்துவம்குறைவுஎன பேராசிரியர் டி சில்வா கூறினார்.

வன்முறை, வன்புணர்வு, துஸ்பிரயோகம் அல்லது கடுமையான பாலியல் துஸ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்க பயிற்சி பெற்ற உளவியலாளர்கள் இல்லாததையும் அவர் சுட்டிக்காட்டினார். துஸ்பிரயோகம் உடல் ரீதியானதாக இருந்தாலும், பாதிக்கப்பட்டவர் உணர்வுபூர்வமான அதிர்ச்சியை அனுபவிப்பார். ஆனால் உளவியலாளர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் முதன்மைப் படிப்பைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றதாகத் தெரிகிறது. பயிற்சி பெற்ற மருத்துவ உளவி–யலாளர்களின் பற்றாக்குறை பாதிக்கப்பட்டவர்களுக்கு வியங்களை கடினமாக்குகிறது, என்றும் அவர் கூறினார்.

வழக்குகள் தாமதமாவது குற்றவாளிகள் தங்கள் குற்றங்களைத் தொடர ஊக்குவிக்கின்றன. எனவே இது உண்மையில் புழுக்களின் கேன். நல்லாட்சியின் அடிப்படைகள் கவ–னிக்கப்படவில்லை, அதிகாரத்தில் இருப்பவர்கள் எந்தக் குற்றத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள ஓர் இடத்தில் ஓர் அமைப்பு இருக்கிறது. இதுவே குற்றங்களின் பெருக்கத்திற்கும் காரணம் என்று அவர் முடிவில் கூறினார்.

மூலம் : டெய்லிமிரர்

காலைக்கதிர் Kalaikkathir

# வாதப்பிரதிவாதங்களை நிறுத்தாவிடின் கிரிக்கெட் போல் மாறும் நாடாளுமன்று

## பிரசன்ன ரணதுங்கவுக்கு பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

கிரிக்கெட் விவகாரம் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர் தரப்பினர் மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்த நிலையில், இந்த வாதத்தை இத்துடன் நிறுத்துங்கள். இல்லாவிடின் நாடாளுமன்றமும் கிரிக்கெட் போல் மாறிவிடும் என சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜ பக்ஷ குறிப்பிட்டார்.

கிரிக்கெட் நிர்வாக சபை கலைக்கப் பட்டதற்கு மக்கள் ஆதரவு இருப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதேவேளை விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட் இடைக்கால குழுவை நியமித்தது சரியா? தவறா என்பதை ஆராய அமைச்சரவை யில் எந்த குழுவும் நியமிக்கப்படவில்லை என அரச தரப்பின் பிரதான கொறடாவும் அமைச்சருமான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாடாளும ன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது மேற்கண்டவாறு குறிப் பிடப்பட்டது.

விசேட கூற்றை முன்வைத்து உரை யாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கை கிரிக்கட் குறித்து நான் கருத்து வெளியிட்டேன். தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு விதிக்கப்பபட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட்டுக்கு இப்படி பயணிக்க முடியா தல்லவா? இந்த அரசாங்கத்திற்குள்ளேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஒரு பக்கத்தில் இழுத்துக் கொண்டிருக்கிறார். விளையாட்டுத்துறை அமைச்சர் ஒரு தீர்மானத்தை மேற் கொள்கிறார். அந்த அதிகாரம் விளை யாட்டுத்துறை அமைச்சருக்கு உள் ளது. அதற்கு அமைவாகவே அவர் செயற் படுகின்றார்.

இடைக்கால குழுவுக்குள் பிரச்சினை கள் காணப்படலாம். அது வேறு கதை. ஆனால் விளையாட்டுத்துறை அமைச் சர் சட்டப்படி நடந்துள்ளார். இப்படி இருந்தால் எதிர்காலத்தில் கிரிக்கெட்டை எமது நாட்டில் எப்படி கொண்டு செல்ல முடியும்? இது குறித்து எங்களுக்கு ஓர் அறிக்கை தேவை. - என்றார்.

இதற்கு பதிலளித்த பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, இது தொடர்பில் விளை யாட்டுத்துறை அமைச்சருக்கு அறிவிப் பேன். - என்றார்.

இதனை தொடர்ந்து எழுந்து உரை யாற்றிய ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர் மானம் குறித்துப் பேசினார். அந்த நீதிம ன்றத் தீர்ப்பைப் பற்றி நான் பேசவில்லை. கிரிக்கெட் நிர்வாக சபை கலைக்கப்படுவ தற்கு மக்கள் ஆதரவு இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழு உறுப்பினர்களைப் பற்றி நாங்கள் பேச வில்லை. இது குறித்து அமைச்சரவை கூட்டத்திலும் உரையாடப்பட்டது. இது குறித்து ஜனாதிபதியும் அமைச்சரும் கலந்து பேசி முடிவெடுப்பார்கள். மற்றபடி அமைச்சர் எடுத்த முடிவு சரியா தவறா என்பதை கண்டறிய எந்த குழுவும் நிய மிக்கப்படவில்லை. - என்றார்.

இதன் போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, நான் விளையாட் டுத்துறை அமைச்சராகவும் சிறிது காலம் பதவியில் இருந்தேன். விளையாட்டுச் சட்டத்தின் கீழ் இடைக்கால நிர்வாகக் குழுவை நியமிக்க அமைச்சருக்கு முழு அதிகாரம் உள்ளது. வேறு யாராலும் முடியாது. அமைச்சராக இடைக்கால குழுவையும் நியமித்தேன். இடைக்கால குழு பணியாற்றிய போது நாங்கள் சம்பி யன் பட்டத்தை வென்றோம்.

இலங்கை கிரிக்கெட்டில் அரசியல்வாதி கள் தலையிடுவதாக இன்று சர்வதேச சமூகம் கூறுகின்றது. அர்ஜுனவால் மட் டுமே கிரிக்கெட்டை மீளக் கட்டி எழுப்ப முடியும். மக்கள் அதனை நம்புகிறார்கள். இந்த இடைக்கால குழு குறித்து ஆராய அமைச்சரவை தனி குழுவை நியமித்தது. - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, அமைச்சர் இது குறித்து விளக்கம் அளித்தார். இனி இதை நிறுத்து வோம். இல்லாவிட்டால் நாடாளுமன்றமும் கிரிக்கெட் நிர்வாக சபை போல் மாறிவிடும். - என்றார். இதன்போது சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. மீண்டும் எழுந்த அமைச்சர் பிர சன்ன ரணதுங்க நான் எதி ர்க்கட்சித் தலைவரிடம் பேசுகிறேன். இந்த நாட்டில் கால்பந்தாட்டத்தை ஊக்குவிக்க உங்கள் தந்தை பெரும் பணி செய்தார். கிரிக்கட்டை இந்த நிலைக்கு கொண்டு வர முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்க பெரும் தியாகத்தை செய்தார். இங்கு தவறு அரசியல்தலையீடுஅல்ல. தவறானவர்களை பதவியில் அமர்த்துவதுதான் தவறு. கலாநிதி என்.எம்.பெரேரா காலத்திலி ருந்து பல அரசியல்வாதிகள் விளையாட் டைக் காப்பாற்ற தியாகங்களைச் செய்தனர். ஆனால் உலகக் கோப்பைக்குப் பிறகு நாட்டில் பணம் புழங்கத் தொடங்கியபோது, சூதாட்டக்காரர்கள், திருடர்கள் மற்றும் மோசடி செய்பவர்கள் விளையாட்டிற்குள் வந்தனர். நானும் அங்கு இருந்ததால் மற்ற திருட்டுகள் பற்றி எனக்கு தெரியும். இன்று நீதிமன்றம் அளித்துள்ள உத்தரவு அரசு எடுத்த முடிவு அல்ல. - என்றார்.(05)

## அப்சீலிங் சாகச விளையாட்டு தாமரை கோபுரத்தில் ஆரம்பம்

இலங்கையில் அப் சீலிங் சாகச விளை யாட்டை கொழும்பு தாமரை கோபுர முகா மைத்துவ நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

அப்சீலிங் என்பது உயரமான இடத்தி லிருந்து செங்குத்தாக கீழே இறங்க கயிற்றைப் பயன்படுத்தி நிகழ்த்தும் சாகசவிளையாட்டாகும்.

அப்சீலிங் சாகச விளையாட்டில் பொதும க்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்பு டிசெம்பர் மாத இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஜனவரி மாத தொடக்கத்தில் வழங்கப்படலாம் என கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதி காரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரி வித்துள்ளார்.

பிரசாத் சமரசிங்க சாகச விளையாட்டில் ஈடுபட தாமரை கோபுரத் திற்கு வருகை தரு மாறு உள்ளூர் மற்றும் வெளிநாட்டினரிடம் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தாமரை கோபுரத்தி லிருந்து 195 மீற்றர் ஏறி இறங்கும் சாகசத்தில் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட குழு ஈடுபட்டது. பொதுமக்கள் மருத்து- வரின் சான்றளிக்கப்பட்ட மருத்துவஅறிக்கையுடன் சாகசத்தை நிகழ்த்த அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும், தாமரை கோபுரம் திறக்கப்பட்டுபதி னான்குமாதங்களுக்குப் பிறகு, மொத்தம் 1.35 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் கோபுரத்தைப் பார்வையிட்டுள்ளார்கள். அதில், சுமார் 34, 000 வெளிநாட்டு சுற் றுலாப் பயணிகள் அடங்குகின்றனர் எனப் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். (05)

## கோட்டை நீதிவான் நீதிமன்றப் பதிவாளரின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டது!

*குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட கோட்டை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*போலி ஆவணம் தயாரித்து குற்றவாளி யாகக் காணப்பட்ட சந்தேகநபரின் பயணத் தடையை நீக்கியதாகக் கூறி அவர் கைது செய்யப்பட்டார்.*

*அவருடன் மற்றுமொரு சந்தேக நபரும் கோட்டை நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.(05)*




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swshpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மதுபான உற்பத்தி நிறுவனங்கள் மூலம் அரசுக்கு ரூ. 6675 மில்லியன் வரியாக வரவேண்டியுள்ளது

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்



மதுபான உற்பத்தி நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு 6675 மில்லியன் ரூபாவை வரியாக வழங்கவேண்டியுள்ளது. அதனை அறவிடுவதற்காக அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமது கேள்வியின் போது -

மதுபான நிறுவனங்களுக்கு அரசாங்கம்வழங்கியுள்ளதேவை-யற்ற நிவாரணம் காரணமாக அரசாங்கத்தின் 50 பில்லியன் ரூபா இழக்கப்பட்டுள்ளது. 750 மில்லி லீற்றர் போத்தலில் 2600 ரூபா வரி மோசடி இடம் பெற்று வருகிறது. மதுபான உற்பத்தி நிறுவனங்கள் பல்வேறு உத்திகளைக் கையாண்டு பல்வேறு பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. அது தொடர்பில் நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்களை மீறியே அந்த செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அவற்றைத் தடுக்கும் வகையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?. - என்றார். அதற்கு தொடர்ந்து பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, மதுபான நிறுவனங்கள் வரியாக 2715 மில்லியன் ரூபாவை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டியுள்ளது.

அவ்வாறு அதனை செலுத்துவதில் ஏற்படும் காலதாமதங்களுக்காக ஒவ்வொரு மாதத்திற்கும் மூன்று வீத வரி அறவீட்டை பெற்று வருகின்றோம்.

அவ்வாறு தாமத கட்டணமாக 4005 மில்லியன் ரூபா அறவிட வேண்டியுள்ளது.

அதற்கிணங்க அந்த நிறுவனங்கள் அரசாங்கத்திற்கு 6675 மில்லியன் ரூபாவை வரியாக வழங்க வேண்டியுள்ளது. அதனை அறவிடுவதற்கான தீவிர நடவடிக்கைகளை அரசாங்கம் மேற் கொண்டு வருகிறது. - என்றார். (05)

# ஹோமாகமயில் பெண் ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை

ஹோமாகம பிரதேசத்தில் ஹோமாகம நீதிமன்ற வீதியில் நேற்று (புதன்கிழமை) காலை யுவதி ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடை சந்தேக நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச்சென்று களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட போது அவரது ஆடையில் காணப்பட்ட இரத்த கறையால் சந்தேகமடைந்த வைத்தியசாலை நிர்வாகம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் தெஹிவளை ஆண்டர்ன் வீதியை சேர்ந்த நபர் ஆவார்.

ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்த 22 வயது யுவதியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

காதல் விவகாரம் தொடர்பில் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகள் களுத்துறை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(05)





# குவைத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 26 வீட்டுப் பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

விசா இல்லாமல் சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியிருந்த 26 வீட்டுப் பணிப்பெண்கள் இலங்கை தூதரகத்தின் மூலம் நேற்று (புதன்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து-வரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்று (புதன்கிழமை) காலை கட்டுநாயக்க விமானநிலையத்தைவந்தடைந்தனர்.

சுமார் 2000 இற்கும் மேற்பட்ட வீட்டுப்பணிப்பெண்கள் மீண்டும் நாடு திரும்புவதற்காக குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் பதிவு செய்திருந்த நிலையில் 26 பேர் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இக்குழு நேற்று காலை 07.05 மணியளவில் குவைத்தில் இருந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமான மான யுஎல்-230 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இவர்கள் இலங்கைக்கு வருவதற்கான பயணச்சீட்டுகளை குவைத்தில் உள்ள இலங்கைத்; தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கைத் தூதரக அதிகாரிகள் குவைத்தின் குடிவரவுத்திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், நீதித்துறை மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து இவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றை நீக்கம் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குவைத்தில் எஞ்சியிருக்கும் இலங்கை பிரஜைகள் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## சித்ரசிறி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி அலி சப்ரியிடம் நேற்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

எமது நாட்டில் பிரபலமான விளையாட்டான கிரிக்கட் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது மிகவும் சிக்கலானது மற்றும் ஆழமானது என்பதனால், அதனை இடைக்கால நிர்வாகக் சபை நியமிப்பதால் மாத்திரம் தீர்க்க முடியாது எனவும் விளையாட்டுத் துறையின் மேம்பாடு தொடர்பாக கவனம் செலுத்துகையில் இதற்காக நிரந்தரமான, உறுதியான தீர்வை வழங்குவது அவசியம் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நிலைப்பாடாகும் என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

'சித்ரசிறி குழுவின் அறிக்கை' அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட போதிலும், 2023 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கானவரவுசெலவுத்திட்டம் என்பவற்றுக்குப் பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய நிலைமையைக் கருத்திற் கொண்டு உத்தேச யாப்பு வரைபை அமைச்சரவை உபகுழுவிடம் சமர்ப்பித்து நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி அறிக்கையை நாளை நாடாளுமன்றத்தில் முன்வைத்து அதனை ஆராய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவை உபகுழுவின் தலைவரும் வெளி விவகார அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த உத்தேச புதிய யாப்பு வரைவின் மூலம் இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபை நியமிக்கும் முறையை முற்றாக மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன் அதன் உள்ளடக்கம், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பனவும் திருத்தப்பட்டுள்ளன.

உத்தேச புதிய கிரிக்கெட் யாப்பின் பிரகாரம், இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபை 04 வருட காலத்திற்கு நியமிக்கப்படும் 18 உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது. கொள்கை முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரங்கள் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், அந்த முடிவுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்கள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பணிப்பாளர் சபையின் 08 உறுப்பினர்கள் பரிந்துரைக்கப்பட்டு பெயரிடப்படுவார்கள் என்பதோடு அவர்களைப் பரிந்துரைக்கும் அதிகாரம், 6 பேர் அடங்கிய நிபுணர்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் தேசிய கிரிக் கட் கவுன்ஸில் தலைவர், வரையறுக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரினால் பெயரிடப்படும் அதிகாரி, சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி, இலங்கை வணிகச் சபையின் தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி, இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி, இலங்கை முகாமைத்துவ கணக்காய்வு நிறுவனத்தின் தலைவர் அல்லது அவர் பெயரிடும் அதிகாரி ஆகியோர் உள்ளடங்குவர்.

பணிப்பாளர் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் தேர்தலின் ஊடாகவே தெரிவு செய்யப்படுவர். அந்த தேர்தலில் 05 கிரிக்கெட் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 01 பணிப்பாளரும், கிரிக்கெட் நடுவர்களின் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும், பெண்கள் கிரிக்கெட் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களின் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும் தெரிவு செய்யப்படுவர்.

கிரிக்கெட் விளையாட்டின் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி செயற்பாடுகளை ஒழுங்குமுறையின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்வதற்காக 12 குழுக்களை நியமிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட், கணக்காய்வுக் குழு, பங்குதாரர் கொடுக்கல் வாங்கல் குழு, வேட்பு மனுக் குழு, தெரிவுக்குழு, போட்டிக்குழு, வசதிகள் மேம்பாட்டுக் குழு, சுற்றுலாக் குழு, விதிகள் - தீர்ப்பு - ஒழுக்கம் தொடர்பான குழு, முதலீட்டுக் குழு, தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து மற்றும் மோசடி தடுப்புக் குழு மற்றும் சம்பளக் குழு உள்ளிட்ட குழுக்களை நிறுவும் யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## தம்மைத்தாமே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும், போதைப்பொருள் வியாபாரத்தையும் இல்லாதொழிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சகல விடயங்களையும் பகிரங்கப்படுத்த முடியாது. இருப்பினும் பாதாள குழுவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் பெறுபேற்றை வெகு விரைவில் அறிந்துக் கொள்ள முடியும்.

சிறைச்சாலைகளில் இருந்தபடியே போதைப்பொருள் வியாபாரத்தை முன்னெடுக்கும் தரப்பினருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் நீதியமைச்சருடன் கலந்துரையாடியுள்ளோம். போதைப்பொருள் ஒழிப்புக்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு வழங்க முடியாது. சீறுடை அணிந்துள்ள பொலிஸார் தங்களின் பாதுகாப்பை அவர்களே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பொலிஸ் சேவைக்கு வரும் போது அவர்களுக்கு அதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே பொலிஸாருக்கு என்று பாதுகாப்பு வழங்க விசேட செயற்திட்டம் ஏதும் வகுக்கப்படவில்லை என்றார்.

## சீனாவுடனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தற் போது சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தினை ஆரம் பித்துள்ளது. அனைத்து கடன்வழங்குநர்களும் ஒரேவிதமாகவும், சமமாகவும் நடத்தப்படுவார்கள் என்ற நாம் நம்புகின்றோம்.

இலங்கை சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் கடன்மறுசீரமைப்பு தொடர்பான உடன் பாட்டை எட்டியுள்ளது. அந்த உடன்பாட்டை ஏனைய கடன்வழங் குநர்களுடன் பகிர்ந்து கொள்ளும் என்று நாம் நம்பிக்கை கொண் டுள்ளோம்.

அந்த உடன்பாட்டு விடயங்களுக்கான நாம் காத்திருக்கின்றோம். இதனால் நாம் அனை வரும் ஒரேமட்டத்தில் இருக்கின்றோம். இதனால் எதிர்காலத்தில் ஒன்றிணைந்து பயணிக்க முடியும் என்ற நம்புகின்றேன்.

இதன் மூலமாக சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடுகள் மற்றும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை, நிர்வாக சிக்கல்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்து முன்னோக்கிப் பயணிக்க முடியும் என்று எதிர்பாக்கின்றோம்.

இந்தச் செயற்பாடுகளை கைவிடாது இருப்பதே தற்போதைய தருணத்தில் முக்கிமானதொரு விடயமாகும். இது நுண்ணுயிர்கொல்லி மருந்தினை உட்கொள்வதற்கு சமமானதாகும். இரண்டு நாட்களாக சுகவீனமுற்று தேறிவருகின்ற நிலையில் மருந்து தேவையில்லை என்று கூற முடியாது. ஆகவே நுண்ணுயிர் கொல்லி மருந்தினை முழுமையாக உட்கொள்ள வேண்டும்.

வலுவான பொருளாதாரத்தினை உறுதி செய்வதோடு, நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை, ஊழல் வேலைத்திட்டங்களின் மூலம் சிறந்த இலங்கை உருவாக்கப்பட வேண்டும்.

அடுத்தவருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படலாம். அதன் பின்னர் அரசியலமைப்புக்கு அமைவாக உள்ளுராட்சி, மாகாணசபைகள், பாராளுமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் நடத்தப்படலாம் என்று நம்புகின்றோம். மக்களின் குரல்களின் மூலமே இவை அனைத்தும் இடம்பெறும்.

மக்கள் தமது வாக்குகள் மூலமாக தமக்கு ஏற்ற தலைமைகளை தெரிவு செய்வதற்கு முயல வேண்டும். எனவே திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு முதல் தேர்தல் நடத்தப்படுமென நம்புகின்றோம்.

## கிராம அலுவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றைய தினம் பிரதமரிடத்தில் வினாக் களை தொடுப்பதற்கான நேரத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரி மான்னவினால் பிரதம ரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜூன் 30ஆம் திகதி நிலவரப்படி இலங் கையில் 2,763 கிராம உத்தியோகபூர்வ வெற் றிடங்கள் இருப்பதாகவும், 2021 மார்ச் 31ஆம் திகதி வரை காணப்பட்ட கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங் கைப் பரீட்சைத் திணைக் களத்தினால் பரீட்சை நடத்துவதற்கும், தற்போது காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப அரசசேவையில் ஊழியர்களை உள் வாங்கவும், அமைச்சர வையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு இலங்கைப் பரீட்சை திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பரீட்சை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## நீர்க் கட்டண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் தீர்மானங்கள் அல்ல. எவ்வாறெனினும் வீட்டு நீர்வழங்கல் பிரிவு தொடர்பிலேயே நாம் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம். நீர் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கையை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அத்துடன் விவசாயத்திற்கான நீரை முகாமைத்துவம் செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வோட்டர் மார்க்கெட் திட்டம் என்பது ஒரு நீண்ட கால திட்டம். அது தொடர்பில் நாம் இன்னும் சிந்திக்கவில்லை. அதற்கான பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவில்லை. விஜித ஹேரத் எம்பி தெரிவிப்பது போல் அது தொடர்பில் எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவும் இல்லை.

எதிர்காலத்தில் நீர் பாவனையை சிக்கனப்படுத்துவது தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அது தொடர்பிலேயே தற்போது பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றார்.

## சுவஸ்திகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் ஒரு நிகழ்ச்சியிலே பேசும்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை பாசிஸ அமைப்பு என விவரித்தார் என்பதாகும். ஒருவர் வெளியிட்ட தனிப்பட அரசியற் கருத்தின் அடிப்படையில் அவரைப் பல்கலைக்கழகத்திலே பேச அனுமதிக்கக்கூடாது எனப் பல்கலைக்கழக மாணவர்கள் நிர்வாகத்துக்கு நெருக்குவாரம் கொடுத்தமை மிகவும் தவறான ஒரு செயல் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பதிவிடுகிறது.

மாணவர்களின் நெருக்குவாரத்துக்குப் பல்கலைக்கழக நிருவாகம் பணிந்து சென்றமையும் ஒரு தவறான செயலாகும். எதிர்காலத்தில் இவ்வாறான செயல்கள் இடம்பெறாது இருப்பதனை மாணவர்களும், நிர்வாகமும் உறுதி செய்வது அவசியம்.

பல்கலைக்கழகம் என்பது அறிவுசார் கருத்துப் பரிமாற்றங்களுக்குரிய ஒரு களம். வெவ்வேறுபட்ட அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் எந்தத் தடைகளும் இல்லாத வகையிலே உரையாடுவதற்கும், விவாதிப்பதற்கும் உரிய வெளியும், சுதந்திரமும் பல்கலைக்கழகத்தினுள் இருப்பது பல்கலைக்கழகத்தின் அறிவு சார் செயன்முறைகளுக்கு மிகவும் அவசியம்.

இலங்கை அரசினதும், அதனது இராணுவக் கட்டமைப்பினதும் கடுமையான கண்காணிப்புக்கும், கட்டுப்படுத்தல்களுக்கும் உள்ளாகி இருக்கும் எமது பல்கலைக் கழகத்தில், மாணவர்கள் தமது அரசியற் கருத்துக்களை சுயாதீனமாக முன்வைப்பதற்கும், நினைவேந்தற் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், போராட்டங்களிலே ஈடுபடுவதற்கும் எதிராகப் பல தடைகள் ஏற்படுத்தப்படுவதனை நாம் அறிவோம். இதன் மிக அண்மைய வடிவத்தினை இந்த வாரம் மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரத்திலே ஜனநாயக ரீதியாகப் போராடிய எமது பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவத்திலே நாம் கண்டோம்.

அரசினாலும், இராணுவத்தினாலும் அச்சுறுத்தலினையும், கட்டுப்படுத்தலினையும் எதிர்நோக்கும் எமது பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினைச் சேர்ந்த ஒரு பிரிவினரே, சுவாஸ்திகா அருளிங்கம் அவர்கள் பங்கேற்க இருந்த நிகழ்வு தொடர்பிலே ஒரு கட்டுப்படுத்தற் செயன்முறையில் ஈடுபட்டமை எமக்கு மிகுந்த ஏமாற்றத்தினையும், நம்பிக்கையீனத்தினையும், கவலையினையும் அளிக்கிறது. இது ஒரு தவறான முன்னுதாரணத்தினை ஏற்படுத்திவிடுமோ என நாம் அச்சமடைகிறோம்.

பல்கலைக்கழகத்தினுள் கல்விச் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதும், கருத்துப் பரிமாறல்களுக்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுப்பதும், மாற்றுக் கருத்துக்களுக்கான இடத்தினை வழங்குவதும் பல்கலைக்கழகத்திலே கற்கும் மாணவர்கள், அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள், பல்கலைக்கழகத்தினை இயக்கும் நிர்வாகிகள் ஆகிய அனைவரினதும் கூட்டுப் பொறுப்பு. அந்தப் பொறுப்பிலே இருந்து நாம் ஒரு போதும் பின்வாங்கக் கூடாது.

பல்கலைக்கழகத்தின் கல்விச் சுதந்திரம் தொடர்பிலே இந்தத் தரப்புக்களிலே ஒரு தரப்பு மற்றைய தரப்புக்கு எந்த விதமான அழுத்தங்களையும் கொடுக்கக்கூடாது. அதேபோல பல்கலைக்கழகத்துக்கு வெளியில் இருந்து வரும் ஒடுக்குமுறைகளை நாம் இணைந்து எதிர்கொள்ள வேண்டும். எமது அரசியல் நிலைப் பாடுகளுக்கு அப்பால் கல்விச் சுதந்திரம் தொடர்பிலே இவ்வாறு கூட்டுணர்வுடனும், கூட்டுப் பொறுப் புடனும் நாம் செயற்படுவதன் மூலமாகவே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள் கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்தினைப் பாதிக்கும் எல்லா அச்சுறுத்தல்களையும் எம்மால் முறியடிக்க முடியும்.

சட்டத்தரணி சுவாஸ்திகா அருளிங்கம் மீளவும் அழைக்கப்பட்டு சட்டத்துறையிலே தனது உரையினை வழங்குவதற்குரிய சந்தர்ப்பம் உருவாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர்கள், பல்கலைக்கழக நிர்வாகம் ஆகிய தரப்புக்கள் இணைந்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். பல்கலைக்கழகத்தினுள் கருத்துச் சுதந்திரம், கல்விச் சுதந்திரம், மாற்றுக் கருத்துக்களுக்கான இடம் என்பவற்றினைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது தொடர்பாக மாணவர்களுடனும், பல்கலைக்கழகத்தின் மாணவர் அமைப்புக்களுடனும் உரையாடுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முடிவெடுத்துள்ளது. இது தொடர்பான செயற்பாடுகளில் நாம் விரைவில் ஈடுபடுவோம் - என்றுள்ளது.



# வவுணதீவில் குளவி கொட்டுக்கு இலக்காகி 8 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பு





மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் பாடசாலைக்கு வீதியால் சென்ற மாணவர்கள் மீது பணை மரத்தில் இருந்த குளவி தாக்குதலில் 8 மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

குறித்த சம்பவம் நேற்று (புதன்கிழமை) காலை 7.00 மணியவில் இடம்பெற்றுள்ளது.

குறிஞ்சாமுனை பகுதியில் பனைமரத்தில் கூடுகட்டியுள்ள குளவிகள் வீதியால் நடந்து சென்ற மாணவர்களைத் தாக்கியுள்ளது. இந்நிலையில், 8 மாணவர்கள் அருகிலுள்ள தாண்டியடி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த குளவி கூடுகட்டியுள்ள பனை மரங்களில் இருந்து கூடுகளை அகற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# புத்தளத்தில் மின்சாரம் தாக்கி ஒரு பிள்ளையின் தாய் இறப்பு

புத்தளம்-புளுதிவாசல்பிரதேசத்தில் மின்சாரம் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் புத்தளம் - புளுதிவாசல் பிரதேசத்தை சேர்ந்த சித்தி சஃபிகான் என்ற 38 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயாவார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வீட்டின் மின்சார கட்டணத்தை செலுத்தாமை காரணமாக குறித்த பெண்ணின் வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர் தனது தாயின் வீட்டில் உள்ள குடிநீர் குழாயுடன் மின் மோட்டாரை இணைத்து தண்ணீர் தொட்டியை நிரப்ப சென்றபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## லலித் கொத்தலாவலவின் இறப்பு விசாரணைத் தீர்ப்பு 14ஆம் திகதி



சிலிங்கோ குழுமத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவலவின் மரண விசாரணையின் தீர்ப்பு இம்மாதம் 14ஆம் திகதி அறிவிக்கப்படும் என கொழும்பு மேலதிக நீதிவான் பஸன் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொத்தலாவலவின் மரண விசாரணை தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கவும் நீதிவான் உத்தரவிட்டார்.

லலித் கொத்தலாவல மரண விசாரணை தொடர்பான சாட்சியங்கள் நிறைவடைந்துள்ளதுடன், இதுவரை 8 சாட்சியாளர்கள் மரண விசாரணை தொடர்பான சாட்சியங்களை வழங்கியுள்ளனர்.

உயிரிழந்த கொத்தலாவலவின் மனைவியின் சகோதரியானரின்போன் விஜேரத்ன, பம்பலப்பிட்டி பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கொத்தலாவலவின் கீழ் பணியாற்றிய பல பணியாளர்களும் சாட்சியமளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)







# இலங்கையின் புதிய தூதர்கள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

இலங்கையின் புதிய தூதுவர்களாக பொறுப்பேற்றுக்கொண்ட இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், எகிப்து, இத்தாலி, கியூபா, பங்களாதேஷ், பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர்கள் மற்றும் பதவி நிலைகளுக்கான பணிப்பாளர்கள் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

இந்த கலந்துரையாடலில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், கைத்தொழில் பேட்டை ஸ்தாபிப்பு, கனிமத் துறைகளின் அபிவிருத்தி, கூட்டு முயற்சி விவசாய அபிவிருத்தி மற்றும் கால்நடை அபிவிருத்தி போன்ற துறைகளை அவர்கள் நியமிக்கவுள்ள நாடுகளுடன் இணைந்து முன்னெடுப்பது குறித்து பேசப்பட்டது.

அண்மையில் இந்த புதிய தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமது நற்சான்றிதழ்களை கையளித்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி பொறுப்பிலிருந்து நீக்கம்

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி வைத்தியர் விஜித் குணசேகர பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உறுப்பினர்கள் எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் அவர் நீக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் ஆங்கில ஊடகம் தெரிவிக்கையில் -

பதவி நீக்கப்பட்ட பின் தலைமை நிறைவேற்று அதிகாரி மீண்டும் சுகாதார அமைச்சிற்கு அழைக்கப்படவுள்ளார்.

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகளை இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் வைத்தியர் விஜித் குணசேகர சிக்கினார். இந்நிலையில், அவருக்கு பயணத் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், வைத்தியர் அண்மையில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பல முக்கிய ஆவணங்களை அழித்தார் என அரசாங்க மருந்துவ சங்கத்தால் கூறப்பட்டது.

எனவே, அவரை தலைமை நிறைவேற்று அதிகாரி பொறுப்பிலிருந்து விலகுமாறு கோரப்பட்டது. எனினும் அதனை அவர் மறுத்தார். தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முன்னாள் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி சமீபகாலமாக தரம் குறைந்த மருந்துகள் தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளது. (05)

# கிரிந்திவெல வீடொன்றில் பெண்ணின் சடலம் மீட்பு

கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊராபொல பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிரிந்திவெல பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் உயிரிழந்தவர் 35 வயதுடையவராவார்.

உயிரிழந்த பெண் தனது குழந்தை, கணவரின் தாய் மற்றும் தந்தையுடன் அந்த வீட்டில் வசித்து வந்துள்ளார். அவரின் கணவர் வெளிநாட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்றபோது உயிரிழந்த பெண் வீட்டில் தனியாக இருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைக்கான காரணம் அல்லது சந்தேகநபர் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. கிரிந்திவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நான்கு கடைகள் தீப்பற்றி எரிந்து மட்டு. ஆரையம்பதியில் நாசம்

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் வர்த்தக நிலையங்கள் மீது தீ பரவியதில் புடைவைக் கடை உட்பட மூன்று கடைகள், வாகனங்கள் கழுவும் இடம் என்பன எரிந்து நாசமாகியுள்ளதுடன், வாகனங்களும் எரிந்து முற்றாக சாம்பராகியுள்ளன.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் தீ அணைக்கும் படையினர் இராணுவத்தினர் பொது மக்கள் இணைந்து தீயை அணைத்த போதிலும் அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளன.

தீபரவலுக்கான காரணம் கண்டறியப் படாத நிலையில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)






JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போது Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# கொழும்பு துறைமுக உட்கட்டமைப்பிற்கு 50 கோடி டொலர் வழங்க அமெ. உறுதி





கொழும்பு துறைமுகத்தில் தெற்காசிய பிராந்தியத்திற்கு முக்கியமான உட்கட்டமைப்பை வழங்கக் கூடிய ஓர் ஆழ்கடல் கப் பல் கொள்கலன் முனையத்தை அபிவிருத்திசெய்யும்பணிக்குஉதவுவதற்காக அரை பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் நேற்று அறிவித்தது.

தனது பங்காளரின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவி செய்யும், உள்ளூர் சமூகங்களின் முன்னேற்றத்தில் முதலீடு செய்யும் மற்றும் உள்ளூர் நிதி நிலைமைகளுக்கு மதிப்பளிக்கும் உயர்தர உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியளிப்பை மேற்கொள்வதில் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை இப்புதிய முனையம் பிரதிபலிக்கிறது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு (இந்தியாவுடன் உட்பட) ஆகியவற்றை ஏற்படுத்துவதில் அமெரிக்கா கொண்டுள்ள நீடித்த அர்ப்பணிப்பை இம்முதலீடு மேலும் நிரூபிக்கிறது.

கொழும்புத் துறைமுகத்திற்குள் அமைந்துள்ள ஆழ்கடல் மேற்கு கொள்கலன் முனையத்தின் அபிவிருத்திக்கு உதவி செய்வதற்கான நிறுவனத்திற்கு வழங்கப்படும் 553 மில்லியன் டொலர் நிதியளிப்பினை ஆரம்பித்து வைப்பதற்காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

புதிய முனையத்தை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதி பணிக்குழுவின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் ஆகியோர் பிரதம நிறைவேற்று அதிகாரி நேதனுடன் இணைந்து கொண்டனர்.

எமது பங்காளர்களின் மூலோபாய நிலைகளை பலப்படுத்தும் அதேவேளையில் அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை முன்னேற்றும் தனியார் துறை முதலீடுகளை அதிகரிப்பதற்கு அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் பணியாற்றுகிறது.

அதைத்தான் கொழும்பு துறைமுகத்தில் மேற்கொள்ளப்படும் இந்த உட்கட்டமைப்பு முதலீட்டின் மூலம் நாங்கள் மேற்கொள்கிறோம் என அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் கூறினார்.

"இலங்கை உலகின் முக்கிய போக்குவரத்து இடங்கடப்பு மையங்களில் ஒன்றாகும். உலகில் பயணிக்கும் அனைத்து கொள்கலன் கப்பல்களில் அரைவாசி இலங்கையின் கடல் வழியாகப் பயணிக்கின்றன. மேற்கு கொள்கலன் முனையத்திற்கான 553 மில்லியன் டொலர்களை தனியார் துறை கடன்களாக வழங்கும் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் அர்ப்பணிப்பானது இலங்கையின் இறையாண்மைக் கடன்களை அதிகரிக்காமல் அதன் கப்பல் திறனை விரிவுபடுத்தி, இலங்கைக்கு அதிக செழிப்பை உருவாக்கும் அதேவேளை பிராந்தியம் முழுவதுமுள்ள எமது நட்பு நாடுகளின் நிலையினையும் பலப்படுத்தும்.' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

'கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தின் நீண்டகால அபிவிருத்திக்காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் 553 மில்லியன் டொலர் முதலீடானது இலங்கையில் தனியார் துறை தலைமையிலான வளர்ச்சியை எளிதாக்குவதுடன் இலங்கையின் பொருளாதார மீட்சியின் போது மிகமுக்கியமான அந்நிய செலாவணி வரவுகளையும் ஈர்க்கும்.

"இந்நிதியுதவியானது, இலங்கை மக்களின் அபிவிருத்தி மற்றும் நல்வாழ்விற்கு உதவிசெய்வதற்கு அமெரிக்கா கொண்டுள்ள நீண்டகால அர்ப்பணிப்பின் அடையாளமாகும். இலங்கை தனது பொருளாதார அடித்தளத்தை மீளப் பெறுவதானது, சுதந்திரமான மற்றும் வளமான இந்தோ- பசிபிக்கிற்கான எமது பகிரப்பட்ட தொலைநோக்கினை மேலும் மேம்படுத்தும்.' என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் கூறினார்.

மூலோபாய முக்கியத்துவமுடைய, பொருளாதார ரீதியாக உறுதியான மற்றும் தனியார் துறையால் வழிநடத்தப்படும் செயற்திட்டங்களை ஆதரிப்பதில் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எவ்வாறு இயங்குகிறது என்பதைக் காட்டுவதற்கான மாதிரியாக இம்முதலீடு அமைகிறது.

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் உலகத்தரம் வாய்ந்த அனுசரணையாளர்களுடன் இணைந்து பணியாற்றுகிறது.

இந்நிறுவனங்களின் உள்ளூர் அனுபவம் மற்றும் உயர்தர தராதரங்கள் உள்ளூர் வேலைவாய்ப்புகளை ஆதரிப்பதற்கு உதவி செய்வதுடன், இச்செயற்திட்டத்தை இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் நீண்ட கால, நிலைபேறான வெற்றியாக மாற்றுவதற்கும் உதவி செய்யும்.

இந்து சமுத்திரத்திலுள்ள மிகப்பெரிய துறைமுகமாகவும் கப்பல்களுக்கிடையே சரக்குகளை மாற்றியேற்றுவதில் மிகவும் பரபரப்பான துறைமுகமாகவும் கொழும்புத் துறைமுகம் விளங்குகிறது. இது 2021 ஆம் ஆண்டு முதல் 90 சதவீதத்துக்கும் அதிகமான பயன்பாட்டில் இயங்கி வருகிறது. மேலதிக கொள்ளளவு அவசியம் என்பதை இது குறிக்கிறது.

முக்கியமான கப்பல் வழித்தடங்களிலும் இந்த விரிவடையும் சந்தைகளுக்கு அருகிலும் இலங்கை கொண்டுள்ள முக்கியமான அமைவிடத்தைப் பயன்படுத்தி, வங்காளவிரிகுடாவில் வளர்ந்துவரும் பொருளாதாரங்களுக்கு இப்புதிய முனையம் சேவையாற்றும் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## களுத்துறையில் விபத்து 13 பேருக்கு காயங்கள்





கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று அதே திசையில் பயணித்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

களுத்துறை, நாகொட, கலஸ்ஸ பிரதேசத்தில் மாபலகமவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றும் ஓட்டோ ஒன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

குறித்த விபத்தின் போது பஸ்ஸில் பயணித்த சுமார் 13 பேர் காயமடைந்து நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## 12 வைத்தியசாலைகளுக்கு மட்டு. மாவட்டத்தில் பூட்டு

வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவருவதால் மட்டக்களப்பில் 12 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் வைத்தியர் தியாகராஜா தவநேசன் தெரிவித்தார்.

'மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று 'வைத்தியர்களுக்கான பொருளாதார நியாயத்தை ஏற்படுத்துவோம்,இலவச சுகாதார சேவையை பாதுகாப்போம் 'என்னும் தொனிப்பொருளில் வைத்தியர்களால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத்தெரிவித்தபோதே வைத்தியர் தியாகராஜா தவநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

'வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவருவதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே வைத்தியர்களின் வெளியேற்றத்தை தடுக்க அவர்களுக்கான பொருளாதார ரீதியான உறுதிப்படுத்தலை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்.

இலவச சுகாதார சேவையைப் பாதுகாப்பதற்காக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து-வருகின்றன. நாட்டைவிட்டு வைத்தியர்கள் வெளியேறுதல், மருந்துகொள்வனவில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்கள் காரணமாக இலவச மருத்துசேவை முடக்கநிலையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இதற்கு தீர்வாக ஆறு தீர்வை ஆறு மாதங்களுக்கு முன்னர் அரசுக்கு அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் வழங்கியிருந்தது. அதற்காக பல்வேறு அழுத்தங்களையும் அரசாங்கத்திற்குவழங்கியிருந்தது. ஆனால்அரசாங்கம்இதுதொடர்பில் உறுதியான நடவடிக்கையை எடுக்காத நிலையில் இலங்கை அரசாங்கம் மாகாணம் தழுவிய தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துவருகின்றது' இவ்வாறு வைத்தியர் தியாகராஜா தவநேசன் தெரிவித்தார். (05)

## விளையாட்டுத் துறை அமைச்சர் நீதித்துறை மீது கடும் விமர்சனம்

அர்ஜுனரணதுங்கதலைமையிலான இடைக்காலக் குழுவின் மீதான வர்த்தமானியை இடைநிறுத்தி வழங்கிய தீர்ப்பு தொடர்பில், விளையாட்டு அமைச்சர் ரொான் ரணசிங்க, நீதித்துறை மீது கடுமையான விமர்சனத்தை விடுத்துள்ளார்.

இந்தத் தீர்ப்பு ஒரு தரப்பின் கருத்தை மட்டுமே கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதாகவும் சட்டமா அதிபர் அமைச்சுக்கு ஆதரவளிக்கவில்லை எனவும், ஊழல் மோசடிகளில் ஈடுபடும் கிரிக்கெட் அதிகாரிகளைப் பாதுகாக்கும் வகையில் செயற்படுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.



விளையாட்டுத்துறை அமைச்சர் ரொான் ரணசிங்க நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை ஆற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கிரிக்கெட் சபை ஊழல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, நீதி அமைச்சர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ்மா அதிபர், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளர், குற்றப்புலனாய்வு திணைக்களம் ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்ததாகவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் கணக்காய்வு அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பி, மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்த போதும் இதுவரை சட்டமா அதிபர் சட்ட நடவடிக்கை எடுக்காது புறக்கணித்துவருகின்றார் என அமைச்சர் ரோஹான் ரணசிங்க தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஓர் இனம் அழிவுறுவதைப் பாற்சோறு கொடுத்து கொண்டாடும் மனநிலையில் தமிழர்கள் இல்லை

## சாணக்கியன் சாட்டை



'காசா போலவே வடக்கும் கிழக்கும் சுடுகாடாக மாற பேரினவாதம் விரும்புகின்றது' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பலஸ்தீனுக்கு ஆதவாக கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர்மேலும்தெரிவிக்கையில்-

காசா சுடுகாடாக மாறுகிறது! வடக்கையும் கிழக்கையும் சுடுகாடாக வைத்துக் கொள்ளவே பேரினவாதம் விரும்புகின்றது. சுடுகாடாக ஆக்கப்படும் நேரத்தில் மௌனம் காத்தவர்கள் பலர். எம்மால் தமிழராக மக்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏன் எனில் அதன் வலியும் வேதனையும் எமக்குத் தெரியும். 2009 ஆம் ஆண்டுக்கும் அதற்கு முந்திய காலத்திலும் எம் குழந்தைகள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். வைத்தியசாலைகள், மத வழிபாட்டிடங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் முகாம்கள் என குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

ஓர் இனம் அழிவதை பால்சோறு கொடுத்து கொண்டாடும்மனோநிலையில்எம்தமிழர் இனம் என்றும் இருக்க மாட்டார்கள். எங்கு அநியாயம் நடக்கின்றதோ அங்கு எமது மக்களின் மற்றும் எனது குரல் ஒலிக்கும். கொல்லப்படுபவர்களுக்கு நீதி வேண்டும் எனவலியுறுத்தும் இலங்கைவாழ் மக்கள் எமது நாட்டில் கொல்லப்படவர்களுக்கு நீதி கிடைக்கவும் போராட வேண்டும்' இவ்வாறு சாணக்கியன் தெரிவித்துள்ளார். (05)

# அமைச்சர் பிரசன்னவின் பெயரை பயன்படுத்திய இரு நபர்கள் கைது



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பெயரைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் கலல்கொட பிரதேசத்தில் காணிகளை நிரப்பிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலவத்துகொட, கலல்கொட பிரதேசத்தில் சட்டவிரோதமாக காணி சுவீகரிப்பு இடம்பெறுவதாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கெக்கிராவ மற்றும் மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடமிருந்து டிப்பர் இயந்திரம் மற்றும் மண் அகழ்வு இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாறான அனுமதியற்ற காணி நிரப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனையடுத்து கூட்டுத்தாபனத்தின் விசேட அமுலாக்கப் பிரிவு 24 மணி நேரமும் செயற்படவுள்ளதாகவும், ஏதேனும் ஒரு பிரதேசத்தில் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்கள் அல்லது மீள் நிரப்பு நடைபெற்றால், அதுபற்றி பொதுமக்கள் இலங்கை காணிஅபிவிருத்திக்கூட்டுத்தாபனத்தின் 011-2885357 அல்லது 011-2868002 ஆகிய எண்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி அறியப்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# பதுளை வீதிகளுக்கு பெயர் சூட்டுவதற்கு தீர்மானமாம்

பதுளை மாவட்டத்தில் பெயரிடப்படாத அனைத்து வீதிகளுக்கும் பெயர் சூட்டுவதோடு வீடுகளுக்கான இலக்கங்களுடன் முகவரிகளை வழங்கும் ஏற்பாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக பதுளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் மேஜர் சுதர்சன தெனிபிட்டிய தெரிவித்தார்.

சரியான முகவரி இல்லாத காரணத்தால் நேர்முகத்தேர்வு, நியமனக் கடிதம் போன்ற ஆவணங்கள் கிடைக்காமல் சிரமத்திற்கு உள்ளான பலர் தம்மிடம் முறைப்பாடு செய்ததாக தலைவர் குறிப்பிட்டார்.

ஒரே பெயரில் பலர் உள்ளனர், வீட்டு இலக்கம் இல்லை, முகவரி உள்ளவர்கள் கூட முழு முகவரியை சரியாகப் பதிவு செய்யாததால், அவர்களுக்கு கடிதங்கள் மற்றும் பொதிகளை வழங்குவதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பதுளை பிராந்திய தபால் அத்தியட்சகர் ஏ.ஜி. சமன் மஹிந்த தெரிவித்துள்ளார். (05)

# ஷாஃப்டரின் காப்பீட்டுத் தொகைகள் ஒருவார காலத்துக்கு இடைநிறுத்தம்

மர்மமானமுறையில் மரணமடைந்ததினேஷ் ஷாப்டரின் காப்புறுதித் தொகையை ஒரு வார காலத்திற்கு இடை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவன அதிகாரிகளுக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ராஜ சூரிய நேற்று (புதன்கிழமை) உத்தரவிட்டுள்ளார்.

ஷாஃப்டரின்மரணம் கொலை என உறுதி செய்யப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட நபர்களுக்கு காப்பீடு இழப்பீடு வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு காப்பீட்டு நிறுவனஅதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவு நீதிமன்றம் விடுத்த கோரிக்கையைமேலதிக நீதிவான் பரிசீலித்ததன் பின்னரே இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். (05)

# கசினோ உரிமையாளர்களுக்கு வரி விவகாரத்தில் சலுகையாம்?

## பொய்யான தகவல் என்கிறார் ரஞ்சித்

'கசினோ உரிமையாளர்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் பொய்யானவை' என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மதுபானம் மற்றும் கசினோ நிறுவனங்கள் மீது அரசாங்கம் அதிக வரிகளை விதித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# வெளிநாட்டவர்களுக்கு இனி காணிகள் விற்கப்படமாட்டா

## அறுதியிட்டு கூறுகிறார் பந்துல



வெளிநாட்டவர்களுக்கு இனி காணிகள் விற்கப்படமாட்டா என அமைச்சரவைப்பேச்சாளரும்,வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில -

ஷங்ரிலா ஹோட்டலை நிர்மாணிப்பதற்கு காலி முகத்திடல் நிலத்தை விற்பனை செய்ததன் பின்னர் எந்தவொரு நிலத்தையும் வெளிநாட்டவர்களுக்குவிற்பனை செய்யாமல்இருப்பதற்குஇலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இருந்தபோதிலும், அரசாங்க வேலைத்திட்டங்களுக்காக நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்க முடியும் இவ்வாறு அமைச்சர்பந்துல குணவர்த்தன தெரிவித்தார். அத்துடன், முதலீடுகளைப் பெறுவது மிகவும் முக்கியம் என சுட்டிக்காட்டிய அமைச்சர், நாட்டில் காணிகளை வைத்துக் கொண்டு அதனூடாக வருமானத்தை ஈட்டாவிட்டால், நாட்டின் பொருளாதாரப் பொறிமுறையை எவ்வாறுநடைமுறைப்படுத்துவது என்றும் கேள்வியெழுப்பினார். (05)

# வடமராட்சி கரவெட்டியில் ஒரு முக்கிய வீதியின் அவலநிலை



வடமராட்சி கரவெட்டியில் முக்கியமான ஒரு வர்த்தக மையமாக வளர்ந்துவரும் நெல்லியடி நகருக்கு மிகவும் அருகில் இருக்கும் சாமியன் அரசடி சந்தியில் இருந்து தெற்கு நோக்கி சோனப்பு மயானவெளிக்கு செல்லும் சுமார் ஒரு கிலோ மீற்றர் வீதி சில வருடகாலமாக செப்பனிடப்படாமல் இருப்பதன் காரணமாக மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கவேண்டியிருக்கிறது.

இந்த வீதியில் இரு வைத்தியசாலைகள் இருக்கின்றன. இரு முக்கிய பாடசாலைகளுக்கும் தச்சந்தோப்புசிந்தாமணிவிநாயகர் ஆலயத்துக்கும்இந்தவீதியூடாகவே செல்லவேண்டும்.

கோடைகாலத்திலேயே மோசமானநிலையில்காணப்படும்இந்த வீதியில் மாரி காலத்தில் மக்கள் அறவே பயணம் செய்யமுடியாத அளவுக்குஆங்காங்கே வெள்ளநீர் தேங்கிக் காணப்படுகிறது.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழைக்கு பிறகு வீதியின் பல இடங்களிலும் தண்ணீர் தேங்கிபோக்குவரத்துச்செய்யவே முடியாத நிலை ஏற்படுள்ளது.

வீதியைச்செப்பனிடுவதற்காக நடவடிக்கைகள்எடுக்கப்பட்டபோது சிலர் செய்ததாகக் கூறப்படும் இடையூறுகள் காரணமாக அது நிறுத்தப்பட்டதாகக்கூறப்படுகிறது. குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதிக்கு சமாந்தரமாக இருக்கும் பல வீதிகள் செப்பனிடப்படுகின்றபோதிலும் இதைச் செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கரவெட்டி மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கரவெட்டி உடுப்பிட்டி தேர்தல் தொகுதியின் முக்கிய பகுதியாகும். யாழ்ப்பாணமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்கள்ஆறுபேரில்நான்கு பேர் உடுப்பிட்டி தொகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

எம்.ஏ. சுமந்திரன், கஜேந்திரகுமார்பொன்னம்பலம், அங்கஜன் இராமநாதன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரே அவர்கள். அதிலும் குறிப்பாக சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும் கரவெட்டியைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். அங்கஜனைப் பொறுத்தவரை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் உடுப்பிட்டி தொகுதியில்கூடுதல்வாக்குகளைப் பெற்றவர். பழைய தேர்தல் தொகுதிமுறையின்அடிப்படையில் பார்த்தால் அவரே உடுப்பிட்டியின் நாடாளுமன்ற உறுப்பினர்.

இவ்வாறாக நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களாக இருக்கின்றபோதிலும், தங்கள் கிராமத்தின் மத்தியில் உள்ள முக்கிய வீதி ஒன்று இத்தகைய அவலநிலையில் இருப்பதையிட்டு கரவெட்டி மக்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

சோனப்பு மயானத்துக்குச் செல்லும் வீதி என்பதால்தான் இவ்வாறு அலட்சியம் செய்யப்படுகிறதோ என்று சிலர் சமூக ஊடகங்களில் நையாண்டிகூடச் செய்வதையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்த வீதியைச் செப்பனிடுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் காரணிகளை அடையாளம் கண்டு களைந்து துரிதமாக செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதை பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுசெய்யவேண்டும் என்று மக்கள் வேண்டுகிறார்கள். அவர்கள் உடனடியாக இது விடயத்தில் கவனம் செலுத்துவார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள்.

அதேவேளை பகுதி மக்களும் பொதுநலன் கருதி ஒன்றுபட்டு எதிர்வரும் நாட்களில் வீதியைச் செப்பனிடும்பணிகள்முன்னெடுக்கப் படுவதற்கு வசதி யாக தங்கள் ஒத்துழைப்பைவழங்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.11.2023இல் வெளியிடப்பெற்றது.